**ஏப்ரல் 21**

**மனன வசனம்**

**நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. 1யோவான் 4:10.**

**ஆராய்ச்சிக்கு**

*யோவான் 14:9; செப்பணியா 3:17; யோவான் 1:1-3; ரோமர் 8:38,39; சங்கீதம் 91:15,16; வெளி 14:6,7; எபேசியர் 1:4,5.*

ஏப்ரல் 21 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

## பாடம் 4

# இரட்சிப்பும் முடிவுகாலமும்



கிறிஸ்தவ மார்க்கத்திற்கும், மற்ற மார்க்கத்திற்கும் இடையே முக்கிய ஒரு வித்தியாசம் இருக்கிறது; அதாவது, மற்ற மார்க்கத்தார் தங்கள் மார்க்கங்களைத் தோற்றுவித்தவர்களின் போதனைகளைதாம் போதிப்பார்கள்; தங்களுக்காக அவர்கள் எதுவும் செய்ததாகச் சொல்வதில்லை. அப்படியே அவர்கள் ஏதாவது செய்திருப்பினும், அவற்றால் இவர்களை இரட்சிக்கவும் முடியாது. மக்கள் தங்களைத்தாங்களே 'காப்பாற்றிக் கொள்ளும் வித்தையைக் கற்றுக்கொடுக்கவே' இந்தத் தலைவர்கள் முயலக்கூடும்.

மாறாக கிறிஸ்தவர்கள், இயேசு என்ன போதித்திருக்கிறார் என்றும், அவர் தங்களுக்காக என்ன செய்திருக்கிறார் என்றும் வலியுறுத்துகிறார்கள். அவ்வாறு கிறிஸ்து செய்திருப்பவைதாம் நாம் இரட்சிக்கப்படுவதற்கான ஒரே வழியாகவும் இருக்கிறது. கிறிஸ்து மனித மாம்சத்தில் வந்தார்; சிலுவையில் மரித்தார்; உயிர்த்தெழுந்தார்; பரலோகத்தில் ஊழியம்செய்கிறார்; இந்தச் செயல்கள் மட்டுமே நம்மை இரட்சிக்கின்றன. ரோமர் 8:3; 5:8; 1பேதுரு 1:4; எபி 7;25. ''மனிதனின் நன்மை, பரிசுத்தம், நேர்மை, அன்பு உள்ளடக்கிய அனைத்தையும் சுட்டிக்காட்டி, இவை மனிதர்களின் இரட்சிப்பில் பங்காற்றியதாக, புண்ணியம்சேர்த்ததாக தேவ தூதர்களிடம் தெரிவித்தால், அந்தப் பேரம் சதிக் குற்றமெனப் புறக்கணிக்கப்படும்.'' - *EGW, FW, p 24.*

கடைசி நாட்களின் வஞ்சனைகளுக்கும் அழிவுகளுக்கும் மத்தியில் இந்த அற்புத உண்மையை அறிந்திருப்பது மிகவும் முக்கியமாகும்.

*2018, ஏப்ரல் 28 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

ஞாயிறு, ஏப்ரல் 22

## பிதாவின் அன்பு

சில நாட்களில் இயேசு சிலுவையில் அறையப்பட இருந்த நிலையில், தம் மூலமாக எவ்வாறு பிதாவிடம் செல்லமுடியுமென்று தம்மோடு இருந்தவர்களுக்கு அவர் சொன்னார். அப்போதுதான் பிலிப்பு, 'ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும்' என்கிறார். யோவான் 14:8.

**பிலிப்புவுக்கு இயேசு சொன்ன பதில் என்ன? இயேசுவின் பதிலில் இருந்து பிதாவைப்பற்றி நாம் என்ன அறிந்துகொள்ள முடிகிறது? யோவான் 14:9. இயேசு சொன்ன பதிலால், தேவனைப்பற்றிய தவறான கருத்து எப்படி நீங்கும்?**

பழைய ஏற்பாட்டின் தேவன் நியாயந்தீர்க்கிறவர் என்றும், புதிய ஏற்பாட்டின் தேவன் முற்றிலும் இரக்கமும் கிருபையும் மன்னிப்பும் நிறைந்தவர் என்றும் சிலர் சொல்கிறார்கள். இவ்வாறு அவர்கள் வித்தியாசப்படுத்திப் பேசுவதில் சிறிதும் உண்மை கிடையாது. இரண்டு ஏற்பாடுகளும் சொல்கிற தேவன் ஒருவரே; அதே பண்புகளை உடையவரே.

பிதாவாகிய தேவனைப்பற்றிய உண்மையை வெளிப்படுத்துதல் என்பது கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்ததற்கான ஒரு காரணம். பல நூற்றாண்டுகளாக தேவனைப்பற்றியும் அவருடைய குணம்பற்றியும் தவறான கருத்துகள் மனிதர் மத்தியில் பரவியிருந்தன. 'தேவனைப்பற்றிய தவறான எண்ணத்தால் பூமி இருளடைந்திருந்தது. அந்தக் கொடிய இருளை நீக்கவும், உலகம் மீண்டும் தேவனைச் சரியாகப் புரிந்துகொள்ளவும் சாத்தானின் வஞ்சக வல்லமையை முறிக்கவேண்டியிருந்தது.' – *EGW, DA, p 22.* இந்தக் காரணங்களை முன்னிட்டும் இயேசு இந்த உலகத்திற்கு வந்தார்.

தேவன் மாறாதவர். பழைய ஏற்பாட்டு நிகழ்வுகளில் சம்பந்தப்பட்ட அனைத்து உண்மைகளும் நமக்குத் தெரிந்திருந்தால், புதிய ஏற்பாட்டில் காணப்படுவதுபோலவே பழையஏற்பாட்டிலும் அவர் இரக்கமுள்ளவராக இருந்திருப்பதைக் காணமுடியும். 'தேவன் அன்பாகவே இருக்கிறார். 1யோவான் 4:8. தேவன் மாறுவதில்லை. 'இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார்.' எபிரெயர் 13:8. பழைய ஏற்பாட்டின் தேவன்தாம் சிலுவையில் நமக்காகத் தொங்கினார் என்பதை மறக்கக்கூடாது.

இந்தத் தேவன் கிருபையும் மனதுருக்கமும் கோபிக்கிறதற்குத் தாமதமுமானவர். சங் 145:8. அவர் உண்மையுள்ளவர், அன்பு மாறாதவர். சங் 143:8. தம்மைப் பின்பற்றுகிறவர்கள்மேல் பிரியமுள்ளவர். சங் 147:11. மக்களுக்கு வளமான வாழ்வைத் தந்து, நம்பிக்கையூட்டுகிறவர். எரே 29:11. அவர் கடிந்துகொள்ளாமல் தம் மக்களை நினைத்து கெம்பீரமாய்க் களிகூருகிறவர். (மகிழ்வுடன் பாடுபவர்). செப் 3:17. தேவன் உண்மையிலேயே இப்படிப்பட்டவர் தாம் என்பதற்கு இன்னும் அநேக வசனங்கள் உள்ளன.

பிதாவாகிய தேவனை இயேசு வெளிப்படுத்துகிறார். தேவனைக் குறித்து பயப்படுகிற ஒருவருக்கு இது எவ்வாறு நம்பிக்கைதருகிற உண்மையாக இருக்கிறது?

## திங்கள், ஏப்ரல் 23

# கிறிஸ்துவின் அன்பு

தேவனிடமிருந்து மனிதர்களை பாவம் பிரித்தது; இருவருக்குமிடையே மிகப்பெரிய பிளவு உண்டானது; அந்தப் பிளவைச் சரிசெய்யாவிட்டால், மனிதர் நித்தியமாக அழியும் நிலை இருந்தது. அவ்வளவுக்கு ஆபத்தான பிளவு அது. பாவப்பிரச்சனையைச் சரிசெய்யவும், நீதியும் பரிசுத்தமும் உள்ள தேவனிடம் மனிதர்களை மீண்டும் ஒப்புரவாக்கவும் நம்புவதற்கரிய ஒரு விஷயம் நிகழ வேண்டியிருந்தது. தேவனோடு நித்தியமும் இருந்த ஒருவர், தேவனாகவே இருந்த ஒருவர், மனிதனாக வந்து, தமது மனிததன்மையில் நம் பாவங்களுக்கான பலியாக தம்மையே கொடுக்கவேண்டியிருந்தது.

**இயேசுவைப்பற்றி யோவான் 1:1–3; பிலிப்பியர் 2:5–8 சொல்வது என்ன?**

கிறிஸ்து நித்தியமானவர்; அவர் எவரையும் சார்ந்திருக்கவில்லை. அவர் தேவனாக இருந்தார்; வெளிப்புற தோற்றத்தில் மட்டுமல்ல, உண்மையிலேயே அவர் தேவனாக இருந்தார். தெய்வீகம் அவருடைய மாறாத பண்பாக இருந்தது. தெய்வீகம் தமக்குள் உள்ளடங்கியிருந்த ஒரு மனிதனாக இயேசு வந்தார்; மனித மாம்சத்தில் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி, நியாயப்பிரமாணத்தை மீறினவர்களான நம் எல்லாருக்காகவும் பதிலாளியாக மரிக்க அவர் வந்தார். ரோமர் 3:23.

கிறிஸ்து ஒரு மனிதனானார்; ஆனால் மற்ற மனிதர்களைவிட கூடுதல் அனுகூலம் எதுவும் அவருக்கு இல்லை. அவர் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தார்; தமக்குள் இருந்த தெய்வீக வல்லமையின் பெலத்தினால் அல்ல; மற்ற மனிதர்கள் கேட்டுப்பெறக்கூடிய அதே தேவ வல்லமையால் கீழ்ப்படிந்தார்.

இயேசு முற்றிலும் தேவனாக, முற்றிலும் மனிதனாக இருந்தார். அதாவது, ‘சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே’ தாங்குகிற அவர் தாமே, ‘முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையாகக்’ காணப்பட்டார். எபி 1:3; லூக்கா 2:16. ‘எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலை நிற்கிறது’ என்று சொல்லப்படுகிறவர்தாமே, ஒரு மனித குழந்தையாக ‘ஞானத்திலும் வளர்த்தியிலும் விருத்தியடைந்தார்.’ கொலோ 1:17; லூக்கா 2:52. ‘உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை’ என்று சொல்லப்பட்டவர் தாமே, ‘மரத்திலே தூக்கிக் கொலைசெய்யப்பட்டார்’ யோவான் 1:3; அப் 5:30.

கிறிஸ்து நம்மேல் அன்பாக இருக்கிறார். பிதா நம்மேல் அன்பாக இருப்பதின் பிரதிபலிப்புதான் அது என்பதை இவ்வசனங்கள் வெளிப்படுத்தும்போது, நாம் ஸ்தோத்திரம்செலுத்த எத்தனை கோடி காரணங்கள் இருக்கும்!

ரோமர் **8:38,39**இல் பவுல் சொல்வது உண்மைதான் என்பதற்கு, இன்றைய பாடத்தில் நாம் படித்தவை எவ்வாறு முக்கிய காரணங்களாக விளங்கமுடியும்?

செவ்வாய், ஏப்ரல் 24

## ஆவியானவரின் அன்பு

பிதாவைக் குறித்து தவறான கருத்து இருப்பதுபோல, ஆவியானவரைக் குறித்தும் தவறான கருத்து நிலவுகிறது. பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையே உள்ள அன்புதான் ஆவி என்று சிலர் கருதுகிறார்கள். அதாவது, பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையே உள்ள பாசம்தான் ஆவியாக இருக்கவேண்டுமெனக் கருதுகிறார்கள். தேவத்துவத்தின் இரு நபர்களுக்கு இடையேயுள்ள வெறும் உறவு என்று அவரைக் குறைத்து நினைக்கிறார்கள்; அந்தத் தேவத்துவத்தில் அவரும் ஒரு நபர் என்று அவரைப் பார்ப்பதில்லை.

ஆனால், அவர் ஒரு நபரென வேதாகமம் நிரூபிக்கிறது. பிதா, குமாரனின் நாமத்தோடு அவருடைய நாமத்தையும் சொல்லித்தான் கிறிஸ்தவர்கள் ஞான ஸ்நானம் எடுக்கிறார்கள். மத் 28:19. ஆவியானவர் கிறிஸ்துவை மகிமைப் படுத்துகிறார்; மக்களைக் கண்டித்து, உணர்த்துகிறார்; துக்கமடைகிறார்; போதிக் கிறார்; பரிந்துபேசுகிறார்; பரிசுத்தப்படுத்துகிறார்.; சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறார். யோவான் 16:14, 8; எபே 4:30; லூக்கா 12:12; ரோமர் 8:26; 1பேதுரு 1:2; யோவான் 16:13. அவர் தேற்றரவாளன்; உதவியாளர் (எளிய மொழி யாக்கம்); துணையாளர் (பொது மொழிபெயர்ப்பு). யோவான் 14:16. பிதா, குமாரனைப்போல ஆவியானவரும் தேவன்தாம். மூவரும் சேர்ந்து ஒரே தேவனாகஇருக்கிறார்கள்.

**ஆவியானவர் சகலவிதத்திலும் தேவனுடைய அன்பை வெளிப்படுத்தவே செயல் பட்டுவருகிறார். அவருடைய கிரியைகள் சிலவற்றைக் கூறுங்கள். லூக்கா 12:12; யோவான் 16:8–13; அப்போஸ்தலர் 13:2.**

ஆவியானவர் தேவன் என்பதற்கு மிகப்பெரிய ஆதாரம் கிறிஸ்து ஒரு மனிதனாக அவதரித்ததுதான். பரிசுத்த ஆவியினால் இயேசு பிறந்தார். மத்தேயு 1:20. தேவன்மட்டுமே அவ்வாறு 'சிருஷ்டிக்க' முடியும்.

நேர்எதிரான இரண்டு அற்புதங்களை கிறிஸ்துவுக்காக ஆவியானவர் செய்தார். **முதலாவது**, சர்வ வியாபகரான கிறிஸ்துவை மரியாளின் கருவறைக் குள் கொண்டுவந்தார். அதே மனித சரீரத்தோடுதான் கிறிஸ்து பரமேறிச் சென் றார். **இரண்டாது**, அதே மனித சரீரத்தோடு இருக்கும் கிறிஸ்துவை உலகம் முழு வதிலுமுள்ள கிறிஸ்தவர்களுக்கு வெளிப்படுத்தி வருகிறார்.

பிதாவோடும் குமாரனோடும் சேர்ந்து ஆவியானவரும் நமக்காகக் கிரியைசெய்கிறார். 'மனிதர்கள்மேல் தேவத்துவம் பரிதாபம்கொண்டது; மீட்பின் திட்டத்தைச் செயல்படுத்த பிதாவும் குமாரனும் ஆவியானவரும் தங்களையே அர்ப்பணித்தார்கள்.' - *EGW, Counsels on Health, p 222.*

**பிதாவும் குமாரனும் ஆவியானவரும் நம்மேல் சம அளவில் அன்புகூருகிறார்கள், நித்திய ராஜ்யத்திற்குள் நம்மைச் சேர்க்கும்படி கிரியைசெய்கிறார்கள். இவ் வளவு பெரிய ஒரு இரட்சிப்பை நாம் புறக்கணிக்கலாமா?**

நம்முடைய நித்திய நலனுக்காக பிதாவும் குமாரனும் ஆவியானவரும் சேர்ந்து செயல்படுகிறார்கள் என்பது நமக்கு எவ்வளவு பெரிய ஆறுதலைத் தருகிறது?

# இரட்சிப்பின் நிச்சயம்

தாங்கள் இரட்சிக்கப்படுவோமா என்கிற சந்தேகம் சில செவந்த்-டே அட்வென்ட்டிஸ்டுகளுக்கு இருக்கிறது. நித்தியவாழ்வு குறித்த நிச்சயம் அவர்களுக்கு இல்லை. எதிர்காலத்தில் என்ன ஆகுமோ என்று பயப்படுகிறார்கள். தங்களை நல்லவர்களாக்க, கடினமாக முயல்கிறார்கள்; முயற்சி தோல்வியில் முடிகிறது. தங்களைப் பார்க்கும்போது, ஆவிக்குரிய பயணம் கலக்கத்திற்கு உள்ளாகி விடுகிறது.

இயேசுவின் குணத்திற்கும் நம் குணத்திற்கும் கொஞ்சமும் சம்பந்தமில்லை என்று காணும்போதும், 'ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாய் இருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்' போன்ற வசனங்களை வாசிக்கும்போதும், 'பரலோகத்திற்குச் செல்ல வாய்ப்புண்டா?' என்கிற சந்தேகம் எல்லோருக்கும் வந்துவிடுகிறது. மத் 7:14.

கடைசிக்காலத்திற்கு ஆயத்தமாக வேண்டுமானால், இப்போதே இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றிருக்கவேண்டும். இரட்சிப்பின் நிச்சயத்தில் களிகூர்ந்தால்தான், எதிர்காலம் குறித்த பயமிருக்காது. தேவத்துவத்தின் நபர்கள் என்றும் உயிரோடிருக்கிறவர்கள்; நம் இரட்சிப்பிற்காகக் கிரியைசெய்து வருகிறார்கள். எனவே, இரட்சிப்பின் நிச்சயத்தோடு நாம் வாழவேண்டும்; வாழமுடியும்.

**பின்வரும் வசனங்களை வாசியுங்கள். இரட்சிப்பு குறித்தும், தேவன் நமக்காகச் செய்திருப்பவைகுறித்தும், நமக்கு அவர் வாக்குரைத்திருப்பவைகுறித்தும் என்ன நிச்சயங்களை அவை நமக்குத் தருகின்றன?**

*சங் 91:15,16*____________________

*யோவேல் 2:31,32*____________________

*யோவான் 10:28*____________________

*ரோமர் 10:-13*____________________

*1யோவான் 5:11-13*____________________

பரிசுத்தமாக வாழும்படி தேவன் சொல்கிறார், அதற்காக நம்மை அழைத்திருக்கிறார். கிறிஸ்து நம்மை இரட்சித்திருப்பதால் பரிசுத்தமாக வாழமுடியுமே தவிர, அந்த இரட்சிப்பைப் பெறுவதற்கான ஒரு வழியாக பரிசுத்த வாழ்க்கை இருக்காது. மரணபரியந்தம் விசுவாசமுள்ளவர்களாக நாம் இருக்கவேண்டும்; ஆனாலும், தேவன் நமக்குத் தந்துள்ள இந்த ஈவுதான் இரட்சிப்பிற்கான ஒரே நம்பிக்கையாகும். கடைசிநாட்களில் தேவ பிள்ளைகள் உண்மையோடும் கீழ்ப்படிதலோடும் வாழ்வார்கள்; கிறிஸ்து தங்களுக்காகச் செய்திருப்பவற்றின் நிச்சயத்திலிருந்துதான் உண்மையான கீழ்ப்படிதல் பிறக்கும்.

## நித்திய சுவிசேஷம்

**'நித்திய சுவிசேஷம்' என்றால் என்ன? வெளிப்படுத்தல் 14:6,7.**

சுவிசேஷம் 'நித்தியமானது'. தேவன் மாறாதவர் என்பதற்கு இதுவும் ஓர் அத்தாட்சி. தேவன் மாறாதவர்; அவருடைய சுவிசேஷமும் மாறாதது. இந்தச் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருப்பவர்கள் அதன் நிச்சயத்தைப் பெறுகிறார்கள். தேவனுடைய அன்பு மாறாது என்பதை சுவிசேஷம் வெளிப்படுத்துகிறது; இந்தச் செய்திதான் உலகத்திற்கு அறிவிக்கப்படவேண்டியுள்ளது. ஒவ்வொருவரும் இதைக் கேட்டாகவேண்டும்; அதனால் இச்செய்தியைப் பரப்ப தம் மக்களை அழைக்கிறார்.

**'தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாய் இருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்துமூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்.' எபேசியர் 1:4,6. சுவிசேஷம் உண்மையிலேயே 'நித்தியமானது' என்பது இதிலிருந்து இன்னும் அதிகமாக எவ்வாறு வெளிப்படுகிறது?**

'உலகத்தோற்றத்துக்கு முன்னே' அவருக்குள் நாம் தெரிந்துகொள்ளப்பட்டோம். இதுதான் 'நித்திய' சுவிசேஷம்! இயேசுவுக்குள் நாம் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது இந்த உலகம் சிருஷ்டிக்கப்படும் முன்னரே அவர் சித்தமாக இருந்தது.

'தெரிந்துகொள்தல்,''முன்குறித்தல்,''தயவுள்ள சித்தம்,''சுவிகாரப்புத்திரர்' போன்ற வார்த்தைகளைக் கவனியுங்கள். 'கிறிஸ்துவுக்குள்' நாம் நித்திய ஜீவனைப் பெறுவதற்கு எவ்வளவாய் அவர் விரும்புகிறாரென இந்த இரு வசனங்களும் கூறுகின்றன. ஆதிகாலம் முதலே தேவன் இதையெல்லாம் செய்துவிட்டார். 2தெச 2:13; 2தீமோ 1:9; எனவே நாம் செய்கிற எந்தக் கிரியையாலும் அல்லது எந்தப் புண்ணியத்தாலும் அல்ல, தேவன் தம்முடைய அன்பால் செய்த செயல் மூலமாகவே இரட்சிப்பு கிடைத்திருக்கிறது; இது அவருடைய சுத்த கிருபை. நாம் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள நாம் சிருஷ்டிக்கப்படுமுன்னரே தெரிந்துகொள்ளப்பட்டோம் என்றால், நாம் செய்கிற ஏதாவது ஒன்றால் அதைப் பெற நினைப்பது சாத்தியமா? அதை ஏற்றுக்கொள்ளவோ புறக்கணிக்கவோ தீர்மானிக்கிற வேலைமட்டுமே நம்முடையது.

அவருக்குமுன்பாக **'நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாக'** நடந்துகொள்வதன்மூலமாக இந்தத் தெரிந்துகொள்ளப்படுதல் நம் வாழ்க்கையில் வெளிப்படுகிறது.

கிறிஸ்துவின் வருகைக்குமுன் அறிவிக்கவேண்டிய கடைசிக்காலச் செய்தியாக இந்த நித்திய சுவிசேஷம் இருக்கிறது. இதை உலகத்திற்கு அறிவிக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். 'நித்திய சுவிசேஷத்தைப்' பிறருக்கு அறிவிக்கும்முன், அதை நாம் அறிந்திருப்பதும், அதன் நிஜத்தை நாம் அனுபவிப்பதும் ஏன் முக்கியம்?

## வெள்ளி, ஏப்ரல் 27

## மேலும் படிக்க:

அசட்டுத்துணிவு கூடாது; ஆனால், இரட்சிப்பின் நிச்சயம் இருக்கவேண்டும். இரட்சிப்பின் நிச்சயம் என்று பொய்யாக நினைக்கவும் வாய்ப்புள்ளது. இதுகுறித்து இயேசு எச்சரித்திருக்கிறார். மத்தேயு 7:21 ஐ வாசியுங்கள். "அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லு வேன்" என்று சொன்னார். மத்தேயு 7:22-23.

இவர்களிடம் இரண்டு கொடிய தவறுகள் உள்ளன. முதலாவது, அவர்கள் பல மகத்தான விஷயங்களைச் செய்திருந்தாலும், தேவ சித்தத்தை நிறைவேற்றவில்லை; அதாவது, அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியவில்லை. 'பாவிகளே,' அல்லது 'குறைவுள்ளவர்களே,' அல்லது 'பூரணமற்றவர்களே' என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று இயேசு சொல்லவில்லை. மாறாக, அவர்களை 'அக்கிரமச் செய்கைக்காரர்' என்கிறார். இதற்கான கிரேக்க வார்த்தை **அநோமிய**; இதற்கு **கட்டளைகளின்படி செய்யாதவர்கள்** என்று அர்த்தம். அவர்கள் முக்கியப்படுத்தும் விஷயங்களைக் கவனியுங்கள்; 'உம்முடைய நாமத்தினால் நாங்கள் இதைச் செய்யவில்லையா? அதைச் செய்யவில்லையா?' என்று கேட்கிறார்கள். தேவனுக்கு முன் தங்களை நியாயப்படுத்த தங்களுடைய கிரியைகளை அவர்கள் சுட்டிக்காட்டு கிறார்கள் என்றால், கிறிஸ்துவைவிட்டு எவ்வளவுதூரம் விலகியிருந்திருக்கிறார்கள்? கிறிஸ்துவின் கிரியைகள்மட்டுமே நம்மை இரட்சிக்கமுடியும்; விசுவாசத்தால் அவற்றை நமக்குச் சொந்தமாக்கலாம். நம் கிரியைகளில் அல்ல, கிறிஸ்து நமக்காகச் செய்தவற்றில்தான் நம் நிச்சயம் இருக்கிறது. உங்களுக்கு நிச்சயம் தேவையா? தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியுங்கள்; பிறகு கிறிஸ்துவுடைய நீதியின் புண்ணியங்களை மட்டுமே சார்ந்திருங்கள்; அப்போது நிச்சயத்தைப் பெறுவீர்கள்.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. 'என்னை நான் பார்க்கும்போது, எப்படி நான் இரட்சிக்கப்படமுடியுமென தெரிய வில்லை. இயேசுவை நான் பார்க்கும்போது எப்படி நான் இரட்சிக்கப்படாமல் போகமுடியுமெனத் தெரியவில்லை' என்று சொல்வாராம் மார்ட்டின் லூதர். இந்த சிந்தனை எவ்வாறு நமக்கும் உதவமுடியும்?

2. உலகத்தோற்றத்திற்குமுன்னரே நாம் இரட்சிக்கப்படுவதற்குத் தெரிந்துகொள்ளப் பட்டோம். அதற்காக எல்லாருமே இரட்சிக்கப்படுவார்கள் என்று சொல்லமுடி யாது; ஏன்? தேவன் எல்லாரையுமே தெரிந்துகொண்டார்; ஆனால் இதை ஏற்றுக் கொள்ளத் தீர்மானிக்காதவர்கள் இரட்சிக்கப்படமுடியாது; இதைத் தியானியுங்கள்.

3. பிதாவும் குமாரனும் ஆவியானவரும் அன்புகாட்டுகிற ஓர் உலகத்தில்தான் தீமை யும் காணப்படுகிறது; இதை தெளிவாகப் புரிந்துகொள்ள மாபெரும்போராட்டம் எவ்வாறு உதவுகிறது?

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,

ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*